# நான்மணிக்கடிகை காட்டும் சமூகம்

# Society Shown by Nanmanikkadigai

***வே. அந்தோணி ராஜா***
உதவிப்பேராசிரியர்
ஆர்.வி.எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர், இந்தியா

**V. Antony Raja**
*Assistant Professor*
*R.V.S. College of Arts and Science*
*Coimbatore, India*

**Citation**: Antony Raja, V. "Society shown by Nanmanikkadigai." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 3, 2025, pp. 41-48.

***ஆய்வுச் சுருக்கம்***
*செம்மொழியாம் தமிழ்மொழிக்கு அணி சேர்க்கும் இலக்கியங்கள் பல்வேறு வடிவங்களில் உள்ளன. அவற்றுள் நவீன இலக்கியங்கள் இன்றைய கால சமூகத்தின் பாடுபொருளாக விளங்குகின்றன. மனிதன் கூடி வாழக் கற்றுக்கொண்ட காலத்திலிருந்து தற்போது வரையிலான மாற்றங்கள், வளர்ச்சி, நம்பிக்கைகள் ஆகியவற்றைச் சமூகவெளியில் காணமுடிகிறது. பண்டைய வாழ்வியல் பழக்கவழக்கங்கள், சமூகத்தின் முன்னேற்றத்திற்குச் சான்றுகளாக இருந்தன. ஒரு நல்ல சமூகத்திற்கு சீறய நெறியைக் காட்டக் கூடிய இலக்கியங்களாக அற இலக்கியங்கள்அமைந்துள்ளன. முக்கியமாக சமூக ஒழுங்கு, தனிமனித ஒழுங்கு ஆகியவற்றைப் பாடுபொருளாகக் கொண்டு பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் வெளிப்பட்டுள்ளன. தனி மனிதன் சமூக அறத்திலிருந்து எவ்வாறு தனக்கான அறத்தைக் கட்டமைத்துக்கொள்வது, தனிமனித அறம் எவ்வாறு சமூக அறமாகக் கட்டமைகிறது என்பதை இப்பாடுபொருள்கள் வெளிப்படுத்தியுள்ளன. களப்பிரர்கள் அதிகாரத்தைக் கட்டமைத்துக்கொண்ட சங்கம் மருவிய காலகட்டத்தில் தோற்றம்பெற்ற இந்நூல்கள் சங்க கால வாழ்வியல் கடைபிடித்த சில வாழ்வியல் விழுமியங்களை மறுத்தன. அதேபோல பேரரசு அதிகாரத்தின்கீழ் மக்களை நிலைகொள்ளச் செய்தன. இந்த அடிப்படையில் உருவான அற நூல்களில் நான்மணிக்கடிகை முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.*
***திறவுச்சொற்கள்:*** *தமிழ், மக்கள், சமூகம், மொழி, குடும்பம், கல்வி, பொருளாதாரம்*

**Abstract**
*There are various forms of literature that accompany classical Tamil. Among them, modern literature is considered as the song of today's society. Changes, development and beliefs can be seen in the social space from the time when man came together to live. The ancient living habits were evidence of the progress of the society. Moral literature is the literature that can show the morals of a good society. Eighteen books have been published mainly on social order and individual order. These works have revealed how the individual constructs his own virtue from social virtue, and how individual virtue becomes social virtue.*
*Originated during the Sangam Maruviya period, when the Kalapras built their power, these books rejected some of the life values that the Sangam lifestyle practiced. Similarly, they made the people stay under the imperial authority. In the alms books formed on this basis, the clock has an important place.*
***Keywords:*** *Tamil, People, Social, Language, Family, Education, Economics*

**முன்னுரை**

*நமது தமிழ் கலாச்சாரத்தின் வேராக நமது குடும்பம், சமுதாய அமைப்பு ஆகியன இருந்தன. சமூகம் என்பது மக்கள்சேர்ந்து வாழ்வதைக் குறிப்பதாகும். அதுமட்டுமல்லாமல் தனிமனிதர்கள் ஓர் ஒழுங்கின் அடிப்படையில் சேர்ந்துள்ளஅமைப்பே சமுதாய அமைப்பாக*

*கருதப்பட்டது. சமுதாயஅமைப்பு பல்வேறு குழுக்களை உள்ளடக்கி அமைகிறது. ஓர் அமைப்பின் கீழ் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்கின்ற மனிதர்களின் சேர்க்கையே சமூக குழுவாகும். அந்தவகையில் நான்மணிக்கடிகை காட்டும் சமூகம் எங்ஙனம் இருந்தது என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.*

**சமூகம் - விளக்கம்**

*“சமூகம்”, “சமுதாயம்” போன்ற சொற்கள் ஒரேபொருளில் பயன்படுத்தப்படுகிறது. மக்கள் குழுக்களைக்குறிக்க “கம்யூனிட்டி” “சொசைட்டி” என்ற இரு ஆங்கிலச்சொற்கள் இருக்கின்றன. “கம்யூனிட்டி” என்பது ஒரேகுலத்தைச் சார்ந்த மக்கள் குழுவை உள்ளடக்கியது. “சொசைட்டி” என்பது பல்வேறு குலத்தைச் சார்ந்த மக்கள்குழுவை உள்ளடக்கியது[1] என்று சமூகம் பற்றி ந.பிச்சமுத்துகூறுகிறார்.*

***“மக்கள் ஒன்று சேர்ந்து கூட்டமாக வாழ்வதற்காக***
***ஏற்படுத்திக் கொண்ட அமைப்பே சமுதாயம் ஆகும்[2]***

*என்று வாழ்வியல் கலைக்களஞ்சியம்சமூகம் பற்றிக் கூறுகியது.*

*“மொழி, இனம், ஒரே நிலப்பரப்பு போன்ற கூறுபாடுகள் மனிதர்கள் இணைந்து சமுதாயமாக வாழ்வதற்குக் காரணங்களாகின்றன. எனவே மனிதன் சமுதாயத்துடன் இணைந்தவன். சமுதாயம் மனிதனுடன் இணைந்தது, சமூகத்திலிருந்து தனித்து வாழும் மனிதன், நீரிலிருந்து பிறந்த மீனுக்கு ஒப்பாவான்[3]*

*சமுதாயம் என்பது குடும்பம், கல்வி, அரசு, மதம் பொருளாதாரம் போன்ற பல்வேறு காரணிகளால் அமையும். இவையெல்லாம் தனித்தனியானப் போக்கில் இயங்கினாலும் சமுதாயம் என்ற ஒரு மையத்துடன் தொடர்பு கொண்டுஇயங்குவதாய் உள்ளன.*

**குடும்பம்**

*தமிழ்ச் சமுதாயத்தின் அடிப்படையாக இருப்பது குடும்பம். ஒரு கணவனும் மனைவியும் தங்களுடைய பிள்ளைகளுடன் இணைந்து வாழும் அமைப்பு குடும்பம். பொருளாதார உற்பத்தித் தேவைகளும், கூட்டுழைப்பும், ஆண்பெண் உறவும் குடும்பத்தை விளக்கமுறச் செய்கின்றன. ஆண், பெண் இணைந்து வாழ்வதற்கு திருமணம் அவசியம். பலதாரமணத்தால் சமுதாயத்தில் சீர்கேடுகள் நிகழ்ந்த போதுஒழுங்குப்படுத்தும் முகமாகத் திருமணமுறை தோன்றியது. இதனை,*

***“பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்***
***ஐயர் யித்தனர் கரணம் என்ப”[4]***

*என்ற தொல்காப்பிய நூற்பா உணர்த்துவதாக அற இலக்கியம்காட்டும் சமுதாயம் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

**ஆடவர் நிலை**

*சமுதாயத்தில் ஆடவர்கள் முதன்மை பெற்றுவிளங்கினர். கற்றவனையம், உயர்குடிப் பிறந்தாரையும், நன்மக்களையும், சான்றோரையும் மக்கள் மதித்தனர். பொருளீட்டல் ஆடவரின் கடமையாகக் கருதப்பட்டது. வருவாய் கேற்ப இல்வாழ்க்கை அமையும் என்பதனால் வருவாயினைப் பெற ஆடவர்கள் உழைத்தனர். மேலும் வருவாய் குறையின் மனைவி வரம்பின்றிப் பேசுவதும் நடைமுறையில் இருந்துள்ளது. பொருளினைச் சேர்ப்பதோடு மட்டுமில்லாமல் அறவழியில் அவற்றைச் செலவிட்டனர். காதலியிடத்து உள்ளம் வைத்து*

*உறங்காமல் தவித்தனர். காதலியின் சொல்லினால் இன்பம் அடைந்தனர். நல்லபெண்களின் நாணத்தை விரும்பி வாழ்ந்தனர் என்பதைக்கீழ்வரும் வரிகள் விளக்கும்.*

***"-------------------------------------------கொடுங்குழை***
***நல்லாரை நல்லவர் நாணுவப்பர் அல்லாரை"[5]***

*மேற்கூறிய கருத்துக்கள் மூலம் பெண்களிடம்ஆண்கள் மிக்க அன்புடன் வாழ்ந்தமையை அறியலாம்.*

*மேலும் கல்வி கற்றமையால் கற்றார் சபையில்வெற்றி பெற்றனர். உருவ அழகோடு நல்லறிவைக்கொண்டவளையே இல்வாழ்க்கைத் துணையாகப் பெற்றனர். பொருளைத் தேடுவோரும், அப்பொருளைக் காப்போரும் உறங்காமல் இருந்தனர். ஒழுக்கம் தவறும் பெண்களைக்காவல் காத்துள்ளனர். ஆடவர் பல மனைவியரை உடையவராய் இருந்துள்ளனர். இச்செய்திகளால் நான்மணிக்கடிகைகாலத்தில் ஆடவர்கள் பொருளினைத் திரட்டி இல்லறவாழ்க்கையைத் தலைமையேற்று நடத்திச் சென்றனர் எனஅறியலாம்.*

**பெண்கள்**

*பெண்கள் நாணமுடையவராய் இருந்துள்ளனர்.*

***"-------------------------------------------- பெண்மை***

*நலத்துக் கணியென்ப நாணம்-6 நாணமுடையவர்களால் இருக்க வற்புறுத்தப்பட்டனர். நாணமில்லாத பெண்ணின் அழகு தீமையாகக் கருதப்பட்டது.*

**இல்லாளின் கடமைகள்**

*இல்லறத்தில் இருந்து கொண்டு கணவனைப்போற்றுதல், மக்களை வளர்த்தல், காத்தல், விருந்து ஓம்புதல், இல்லறத்தை நடத்திச் செல்லல் போன்ற அனைத்தும்பெண்களுக்கு உரியதாக இருந்தன. இதனை,*

***"கற்புங் காமமும் நற்பா லொழுக்கமும்***
***மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்***
***விருந்துபுறந் தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்***
***பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்***
***முகம்புகல் முறைமையிற் கிழவோற் குரைத்தல்***
***அகம்புகல் மரபின் வாயில்கட் குரிய"[7]***

*என்று தொல்காப்பியரும் குறிப்பதால்அறியலாம்.*

*இல்லற வாழ்வில் பெண்ணின் பங்கு பெரும்பங்காக இருந்தது. இதனை இல்லறத்திற்கு பெண் விளக்கு போன்றவள் என்றும், மனையாள் இல்லாத வீடு பாழானது என்றும் கூறுவதால் அறியலாம்.*

*உருவ அழகோடு வாழ்க்கையை நடத்தும் நல்லறிவும்உடையவர்களாக பெண்கள் இருந்தனர். உருவ அழகில்லாதபோதும் நல்ல குணம் உடையவர்களாகவும் பெண்கள் இருந்தனர். கணவனைப் போற்றி நிற்பதே நற்செயலாகப்பெண்கள் கருதினர். கணவனைத் தவிரமற்ற தெய்வங்களை வணங்காதவர்களாய் இருந்தனர். கணவனைப் போற்றி அவன்வழி நிற்கும் பெண்ணே இன்பம் தருபவளாக அமைந்தாள். இவற்றை நோக்கும்போது, தமிழ்ச் சமுகத்தின் வேர் இல்லறம், இல்லறத்தில் பெண் சிறந்து விளங்கினால் மற்றவர்களும் அவளை சிறப்பபிப்பர் என்பதை அறிய இயலும்.*

*நல்ல பெண்கள் காவல் இல்லாவிட்டாலும் கற்பு ஒழுக்கத்தினை மேற்கொண்டனர். நற்பண்பில்லாதவள் கணவனே காவல் செய்தாலும் தான் விரும்பியவரைக் காதலித்து வாழ்ந்தாள் என்பதை நோக்கும்போது ஒரு பெண்நல்ல வாழ்க்கை வாழ்வதற்கும், அவ்வாழ்க்கையைத் தீமை உடையதாக மாற்றிக் கொள்வதற்கும் அப்பெண்ணே காரணமாகிறாள். இதனை,*

***"சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்***
***நிறைகாக்கும் காப்பே தலை[8]***

*என்ற வள்ளுவர் கூற்றாலும் அறியலாம். மேலும் மாதவர் ஒழுக்கம் என்பது அவர் தாமே விரும்பி ஏற்றுக் காக்கும் ஒன்றாக இருக்க வேண்டுமேயன்றிஅது காவலாலும், கட்டுப்பாட்டாலும் அமையக்கூடாது.*

**சாதிப் பிரிவுகள்**

*தமிழர் வழக்கில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளன் என்ற நால்வகைப் பாகுபாடுகள் காலங்காலமாக இருந்து வருகின்றன. இதனுள் பல உட்பிரிவுகளும் தோன்றி உள்ளன. தொழில் அடிப்படையிலே இச்சாதிப் பகுப்புமுறைகள் தோன்றின. நான்மணிக்கடிகையில் அந்தணர், அரசர், வேளாளன் என்ற மூன்று சாதிகள் பேசப்படுகின்றன.*

**அந்தணர்கள்**

*அந்தணர்கள் நான்மணிக்கடிகை காலத்தில் உயர்நிலையில் வைத்துப் போற்றப்பட்டனர். அந்தணர்குடியில் பிறப்பதை உயர்வாகக் கருதினர். அந்தணரைப் போன்ற பிறப்பு இல்லை என்றும் அந்தணர்கள் அறநினைவுகளை நினைப்பார்கள் என்றும் கூறுவதினால்அந்தணர்கள் சமுதாயத்தில் உயர்நிலையில் வைக்கப்பட்டிருந்ததை அறிய முடிகின்றது. மேலும் எவரோடும் மாறுபாடு கொள்ளாமல் வாழும் வாழ்க்கை அந்தணரின் வாழ்க்கை என்பதை*

***"எருதுடையான் வேளாளண் ஏலாதான் பார்ப்பான்***
***ஒரு தொடையான் வெல்வது கோழி - உருவோடு"[9]***

*அதாவது ஒரு காலால் பெடையை வயப்படுத்துவதான சேவற்கோழியைப் போல எவர் பகையையும் ஏற்றுக்கொள்ளாமல் யாவரையும் வயப்படுத்தி ஒற்றுமையுடன் வாழ்பவன் பார்ப்பானாவான் என்பதனால் அறிய முடிகிறது. அந்தணர்கள் நான்மறைப் பொருள்களை அறிந்திருந்தனர். உயர்பிறப்பில் பிறந்தோர் அறம் செய்வதால் இருமையிலும் இன்புற்றனர் என்பதாலும் உயர் பிறப்பின் தன்மையை அறியமுடிகிறது.*

**வேளாளன்**

*உழவுத் தொழிலைச் செய்பவர்கள் தம்மைமட்டுமல்லாது உலகத்தையும் வாழ்விக்கும் தன்மை கொண்டவர்கள். மேலும் உழவுத்தொழில் அக்காலத்தில் சிறப்பான ஒன்றாகக் கருதப்பட்டது. வேளாளர்களும் சிறப்பிக்கப்பட்டனர். வேளாளனைக் குறிக்கும் போது அவனை மட்டும் சிறப்பிக்காமல் அவனது எருதுகளையும் சிறப்பிப்பது குறிப்பிடத்தக்கது. இதனை*

***"எருதுடையான் வேளாளன்"[10]***

*என்ற தொடர் உணர்த்துவதாக உள்ளது. அக்காலத்தில் எருது மாடுகளை உடையவர்கள் சிறப்பாகக் கருதப்பட்டனர். வயலினது தன்மையை வயலுக்குரியவர்கள் அறிந்திருந்தனர். வயலின் தன்மைக்கேற்பவே பயிரானது வளரும். பருவமும் பருவத்திற்கேற்ற பயிரும் அறிந்து பயிர்செய்தால் விளைபொருள்கள் நன்கு விளையும்.*

**பிற சாதிகள்**

*தாம் கண்ணால் கண்டதையே செய்ய வல்லவர்கம்மியர். பொற்கொல்லர் கண்ட ஒரு பொருளை அப்படியே செய்யும் திறமை பெற்றவர்கள். கம்மியர் என்ற சொல் ஒரு சாதியைக் குறிப்பதாகும். இரும்பினை இரும்பினால் வெட்டுவர் என்பதனால் இரும்புவேலை செய்வோரும் அக்காலத்தில்இருந்தனர். இரும்பு வேலை செய்பவர்களை கருங்கொல்லர் சாதியைச் சார்ந்தவராகக் கருதலாம்.*

**கீழோர்**

*கீழோர் என்பவர் அறிவினால் கீழ்ப்பட்டவர் என்றபொருளில் கையாளப்பட்டிருப்பதைச் சமுதாயத்தின்அடித்தளத்தில் பொருளாதார ஏற்றத்தினாலும், அவர்களதுஒழுகலாறுகளாலும் ஒதுக்கப்பட்ட தீண்டத்தகாதவடி;களைக்குறித்திருக்குமோ என்ற ஐயமானது ஏற்படுகின்றது. கீழோர்கள் மகிழ்ச்சியால் ஆரவாரிப்பர் என்றும், கீழ்மக்கள்சோற்றால் இன்புறுவர் என்றும் கீழ்மக்களுக்கு எல்லா ஊரும்தமது ஊர் என்றும்*

***“------------------------------------------ யல்லாக்***
***கடைகட்குந் தம்மூரென் றூரில்லை தங்கை”***[11]

*என்ற பாடல் வரி உணர்த்துகிறது.*

*கீழ்மக்களுக்கு உணவு ஒன்று கிடைத்தால் தம் மக்கள், உறவு என்பதையெல்லாம் மறந்துவிட்டுத் தான் எங்கு உள்ளனரோ அங்கு, உணவு கிடைத்தால் போதும் என்ற எண்ணத்தோடு வாழ்ந்திருப்பர் என அறிய முடிகிறது.*

**தொழில்கள்**

*அக்காலத்தில் உழவுத் தொழிலே சிறப்பாக நடைபெற்று இருந்தது. பிற தொழில்களும் சிறிய அளவில் நடைபெற்றிருக்கலாம். ஆனால் பொருளாதாரத்திற்குப் பெரிதும் உழவுத் தொழிலையே நம்பி இருந்தனர்.*

**உழவுத் தொழில்**

*உழவுத் தொழில் சிறப்பாக நடைபெற்றது. நெற்பயிரும், கரும்பும் விளைவிக்கப்பட்டுள்ளது. அதற்கு நீர்இன்றியமையாதாக இருந்துள்ளது. நெற்பயிர் நீர் இல்லையென்றால் கெட்டு விடும் என்பதினாலும், பயிர்கள் நீர்இல்லையென்றால் கெட்டுவிடும் என்பதினாலும் உழவுத்தொழிலுக்கு நீர் இன்றியமையாதது என்பதை அறிய முடிகிறது.*

*உழவுத்தொழிலுக்கு எருதுகள் மிகவும் இன்றியமையாத ஒன்று. அதனால் எழுது மாடுகளை உடையவன் வேளாளன்*

***“எருதுடையான் வேளாளன் -------------------------***
***செறிவுடையான் சேனா பதி”***[12]

*என்ற தொடரால் எருதுகளின் சிறப்புக்கள் தெரிகின்றன. எனவே உழவுத் தொழிலால் மக்கள் பொருளாதார நிலையில் சிறந்து விளங்கினர் என்பதை அறியமுடிகிறது.*

**மருத்துவம்**

*மனித வாழ்விற்கு இடையூறுகள் பல்வேறு விதங்களில் ஏற்படுகிறது. மனிதன் தோன்றிய போதே நோயும்தோன்றியிருக்கும். துன்பம் வரும் வேளைகளில் அதைதீர்ப்பதற்கான வழிமுறைகளையும் மனிதன் அறிந்து இருப்பான். நோய் தோன்றிய போதே அதனை போக்க*

*மருந்துகளை நாடியிருப்பான். அத்தகைய மருந்துகளைவைத்திருப்பவன் மருத்துவன் என்று அழைக்கப்பட்டான். நான்மணிக்கடிகை காலத்திலும் மருத்துவத்தொழில் நடந்ததை "மருத்துவன் சொல்கென்ற போழ்தேபிணியுரைக்கும்[13] என்ற வரி உணர்த்துகிறது.*

**கள் இறக்குதல்**

*கள் இறக்கும் தொழில் பரவலாக நடைபெற்று இருந்தது. ஆனால் கள்ளுண்ணாமையைப் போற்றுவதனால் இந்நூலினில் அதிகமாகக் கள் குடிப்பதைப் பற்றிக் கூறவில்லை. "கட்குடியை உடம்பின் களிப்பினால் அறிவர்-14 என்பதினால் கள் இறக்குதலும், விற்றலுமாகியதொழில்கள் நடைபெற்று இருந்திருக்கலாம் என அறியமுடிகிறது.*

**கொல்லர்**

*பொற்கொல்லர்கள் அழகிய அணிகளைச் செய்துகொடுத்துள்ளனர். "கண்டதே செய்பவாங் கம்மியம்"[15] என்பதாலும் பொன்னின் தன்மையைச் சுட்டு அறிவர் என்பதாலும் பொன் வேலையைச் செய்யும் தொழிலானதுநடைபெற்றிருக்கிறது என்று அறியலாம்.*

*"இரும்பினை இரும்பால் வெட்டுவர்"[16] என்பதால் கருங்கொல்லர்களும் அக்காலத்தில் இருந்துள்ளனர் என்றும் போர்த் தொழிலுக்குத் தேவையான வேல், வாள் போன்ற கருவிகடிளும் இவர்கள் செய்திருப்பர் என்றும் அறியலாம்.*

**நீர்பாசனத் தொழில்**

*உழவுத் தொழிலினைச் செய்வதற்கு நீரானது அவசியம். அக்காலத்தில் நீரினை அணைகள் கட்டியும், ஏரிகளினாலும் பாதுகாத்துள்ளனர். "ஏரி சிறிதாயின் நீர்ஊரும்[17] என்பதினால் ஏரியினை ஆழ்ப்படுத்த வேண்டும்என்ற கருத்து வெளிப்படுகிறது. குளங்களும் நீர்பாசனத்திற்குப் பயன்பட்டுள்ளன. இதனை "வளம் இல்குளத்தின் கீழ் நெற்சாம்[18] என்ற வரியினால் அறியலாம். நீரால் விளைநிலம் சிறப்படையும் என்பதை "நீரான்வீ றெய்தும் விளைநிலம்[19] என்ற வரியினால் நீரின் இன்றியமையாமையினையும் அறியலாம்*

**மரங்கள்**

*இயற்கையைப் பற்றிப் பாடாத புலவர்களே இல்லை. நான்மணிக்கடிகையிலும் இயற்கை சார்ந்த பொருள்களைப்பற்றி ஆங்காங்கே ஆசிரியர் குறிப்பிட்டுளள்ளார். "நிறைவனத்து நெற்பட்ட கண்ணே வெதிர்சாந்தென(நா.ம.க.பா.எ.4) மரங்கள் நிறைந்த காட்டில் மூங்கில்கள் நெல்லுண்டான போதே பட்டுப்போகும். "கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும் (நா.ம.க.பா.எ.6) அகில் கட்டையானதுகள்ளிமரத்தின் நடுவில் உண்டாகும். "பெய்யல் முழங்கத்தளிர்க்குங் குருகிலை (நா.ம.க.பா.எ.38) குருக்கத்திமரமானது மழை முழக்கத்தால் இலை தளிர்க்கும். மேற்கண்ட பாடல் வரிகளின் மூலம் கள்ளி, குருக்கத்தி மரம், மூங்கில்போன்ற மரங்களின் பெயர்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.*

**மலர்கள்**

*மலர்களால் மாலை கட்டிப்போடும் பழக்கம் அக்காலத்தில் இருந்துள்ளது. "போதினான் நந்தும்புனைதண்தார் (நா.ம.க.பா.எ.50) தொடுக்கப்படும் குளிர்ந்தமாலையானது பூக்களால் நன்கு விளங்கும் என்பதிலிருந்துமலர் பயன்படுத்தப்பட்டது புலனாகிறது. "குளத்துக்கணியென்ப தாமரை (நா.ம.க.பா.எ.11) செந்தாமரையானது குளத்துக்கு அழகு சேர்ப்பதாக அமையும்.*

*"மடையின்றி நீள்நெய்தல் வாடும் (நா.ம.க.பா.எ.44). மேற்குறிப்பிட்டவரிகளிலிருந்து தாமரை, நெய்தல் போன்ற மலர்கள்நான்மணிக்கடிகையில் பயின்று வருவதை அறிய முடிகிறது.*

**விலங்குகள்**

*"மலைப்பினும் வாரணந் தாங்கும் (நா.ம.க.பா.எ.25) குழந்தையானது தாய் தன்னை அடித்தாலும் அம்மா! அம்மா! என்று கூறிக்கொண்டே அவள் அருகில் ஓடும். அதுபோல் யானையானது பாகன் தன்னை வருத்தினாலும்அவனைச் சுமந்து செல்லும். யானையைக் கட்டுத் தறியினால் வயப்படுத்துவர். யானையானது கீழே நட்டு வலிவமைந்த தூண்வலுவில் நிலைபெறும். யானையையுடைய போர்த் தலைவர் அதன் சினத்தை விரும்புவர். "தொழுத்திறந்து கன்றூட்டநந்துங் கறவை (நா.ம.க.பா.எ.63) கொட்டிலைத் திறந்து கன்றுகளை உண்ண அனுப்பினால் ஆவின் மடியில் பால்பெருகும். "புல்லினான் இன்புறூஉங் காலேயம் (நா.ம.க.பா.எ.68) ஈரம் பொருந்திய நிலத்திலுள்ள புல்லினைமேய்ந்து ஆநிரைகள் இன்பம் அடையும். ஆநிரைகள் கூரியகொம்புகளை உடைய எருதுகளால் சிறப்படையும். "கொல்லேறு கோட்டால் நோய் செய்யும் (நா.ம.க.பா.எ.14) கொலை பயிலும் காளை மாடானது தன்னால் குறிக்கப்பட்டவர்களுக்கு தன்னுடைய கொம்புகளால் துன்பம்தரும். மான் வயிற்றில் ஒளியுள்ள அரிதாரம் உண்டாகும். குதிரையின் நல்லியல்பை அதன்மேல் ஏறிய பின் அறிவார்கள். கடிவாளம் பூண்ட குதிரைகள் அவற்றை ஏறிச்செலுத்துபவரின் திறனைப் பொறுத்தது. மேற்குறிப்பிட்டசெய்திகள் முறையே யானை, ஆநிரை, ஏறு, புலி, எருது, மான், குதிரை போன்ற விலங்குகள் நான்மணிக்கடிகை காலத்தில்இருந்தன.*

**பழக்க வழக்கங்கள்**

*பழக்க வழக்கம் என்பது ஒரு செயலைத் தொடர்ந்துசெய்யும் போது அது பழக்கமாகவும் வழக்கமாகவும் மாறுகிறதுஎனலாம். நெருப்பு எரிவதற்கு நெய்யை ஊற்றினர் "நெய்விதிர்ப்ப நந்தும் நெருப்பழல் சேரந்து (நா.ம.க.பா.எ.63) திரியலிருந்து வரும் சுடர் சிறிதாக இருந்தாலும் அதனை உலகத்தார் தொழுவர். "திரியழல் காணல் தொழு (நா.ம.க.பா.எ.66) கள் குடிப்பதைப் பழக்கமாகக் கொண்டிருந்தனர். "மெய்கண் மகிழான் அறிப நறா (நா.ம.க.பா.எ.80) யானையைக் கட்டுத்தறியினால் வயப்படுத்துவர். "கந்திற் பிணிப்பர் களிற்றை (நா.ம.க.பா.எ.12) பெண்கள் கண்களுக்கு மையிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். "மையால் தளிர்க்கும் மலர் கண்கள் (நா.ம.க.பா.எ.38) நல்ல பாம்பை அதன் சீற்றந்தவிரும்படி மந்திரத்தினால் வயப்படுத்துவர். "கதந்தவிரமந்திரத் தாற்பிணிப்பர் மாநாகம் (நா.ம.க.பா.எ.12) மேற்கண்ட செய்திகளால் அக்கால மக்களின் பழக்கவழக்கங்களை அறிய முடிகிறது.*

**நம்பிக்கைகள்**

*மக்கள் பாவ புண்ணியங்களிலும், இம்மை மறுமைமறுமையிலும் நம்பிக்கை கொண்டு வாழ்ந்துள்ளனர். இம்மையில் செய்த அறச்செயல்கள் மறுமையில் துணைவரும். "தனக்கணியாம் தான்செல் உலகத் தறம் (நா.ம.க.பா.எ.11) மேன்மையான தாயென்று சொலல்ப்படுபவள் முற்பிறப்பில் தான் செய்த நல்ல வினையாகும். தாயென்பாள் முந்துதான் செய்த வினை (நா.ம.க.பா.எ.45) முற்பிறப்பில் நல்வினை குறைவாக இருந்தால் இப்பிறவியில் தீவினை பெருகிக் காணப்படும் (நா.ம.க.பா.எ.102) . மேற்குறிப்பிட்ட வரிகளின் மூலம் மக்கள் பிறவி பற்றிய நம்பிக்கைகளையும், நல்வினை தீவினைகளிலும் நம்பிக்கைக் கொண்டிருந்தனர் என அறிய இயலும்.*

**முடிவுரை**

*ஆடவரும் பெண்டிரும் இல்லறத்தில் ஈடுபட்டு நல்லமக்களைப் பெற்று, வளர்த்து சுற்றந்தழுவி, நல்லறங்களைச் செய்து, இனிய வாழ்வு வாழ்தலே வாழ்வியலாகும். வாழ்வியலின் கூறுகளான குடும்பம், ஆடவர், பெண்டிர், சாதிப்பிரிவு, தொழில்கள்; மரங்கள், விலங்குகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் முதலான செய்திகளின் வழி அக்கால சமுகத்தின் நிகழ்வுகளையும் பண்பாட்டுவிழுமியங்களையும் அறிய முடிகிறது.*

**சான்றெண் விளக்கம்**

1. *டாக்டர் மு.வ. புதினங்களில் சமுதாய மறுமலர்ச்சிதாக்கம்- ந.பிச்சமுத்து ப.8*
2. *வாழ்வியல் கலைக்களஞ்சியம் ப.477*
3. *சமூக நாவல் - இரா.தண்டாயுதம் ப.38*
4. *தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணார்உரை பா.145*
5. *நான்மணிக்கடிகை பாடல் எண். 54*
6. *மேலது .11*
7. *தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணார் உரைபா.154*
8. *திருக்குறள் 57*
9. *நான்மணிக்கடிகை பாடல் எண்.55*
10. *மேலது .55*
11. *மேலது .84*
12. *மேலது .55*
13. *மேலது .77*
14. *மேலது .80*
15. *மேலது .41*
16. *மேலது .36*
17. *மேலது .102*
18. *மேலது .83*
19. *மேலது .86*

**துணைநூற்பட்டியல்**

1. *வாழ்வியல் கலைக்களஞ்சியம், தமிழ் பல்கலைக்கழகம்.*
2. *தண்டாயுதம், இரா. சமூக நாவல், தமிழ் புத்தகாலயம்.*
3. *தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணார் உரை, சாரதா பதிப்பகம்.*
4. *நான்மணிக்கடிகை உரையும் மூலமும், சாரதா பதிப்பகம்.*
5. *திருக்குறள் பரிமேலழகர் உரை, கங்கை புத்தக நிலையம்.*

**References**

1. *Encyclopedia of Biology*, Tamil University.
2. Dhanatayudham, R. *Social novel*, Tamil Book Store.
3. *Tolkappiyam porulatikaram, Ilampuranar Text*, Saradha Publications.
4. *Nanmanikkadikai Text and Source*, Saradha Publications.
5. *Thirukkural Parimelazhakar Text*. Ganga Book store.